# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## அரையாண்டுத் தேர்வு - 2010 - 2011

## தமிழ்மொழி - ஆண்டு 11

சுட்டெண்:.................................................... நேரம்: 150 மணித்துளிகள்

**1) மிகப்பொருத்தமான விடையைத் தெரிவுசெய்து, கூட்டில் புள்ளடி இடுக.**

1. இளங்கோவடிகள் எழுதிய ஒப்புயர்வற்ற இலக்கியம்.

   அ) மணிமேகலை ஆ) இராவணகாவியம் இ) சிலப்பதிகாரம் ஈ) புறநானூறு

   அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

2. சிலப்பதிகாரக் கதை தொடங்கும் இடம்

   அ) சோழநாடு ஆ) சேரநாடு இ) பாண்டியநாடு ஈ) வளநாடு

   அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

3. மாசாத்துவான் என்போன்

   அ) பொன்வணிகன் ஆ) நிலவணிகன் இ) கடல்வணிகன் ஈ) பெருவணிகன்

   அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

4. சரியான வினைத்தொகைச் சொற்றொடர்

   அ) வான்மதி ஆ) மதிமுகம் இ) நெற்பயிர் ஈ) விளைபயிர்

   அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

5. தரப்பட்டுள்ளவற்றுள் பண்புருபுக்கு எடுத்துக்காட்டு

   அ) ஆகிய (ஆ) போன்ற (இ) ஆகவே (ஈ) ஆதலால்

   அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

6. செந்தாமரை விரிய பைந்தார் அசோகம் மடலவிழ வந்தது.

   அ) இளவேனில் ஆ) கார்காலம் இ) முதுவேனில் ஈ) காளமேகம்

   அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

7. கவுந்தியடிகள் என்பவர்

அ) பூசாரிணி ஆ) பிக்குணி இ) மருத்துவிச்சி ஈ) வனசாரணி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

8. கோவலன் இறக்கக் கரணியமாக இருந்தது

அ) சிலம்பு ஆ) வாள் இ) பணம் ஈ) மாணிக்கம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

9. ஆத்தொழில் செய்வோர் வாழும் ஊர்

அ) சேரி ஆ) ஆயர்பாடி இ) குப்பம் ஈ) பாக்கம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

10. அல்வழித்தொகைகள் எத்தனை?

அ) ஆறு ஆ) நான்கு இ) இரண்டு ஈ) ஐந்து

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

11. பொதுப்பெயர் சிறப்புப்பெயர் இரண்டும் அடங்கிய பெயர்ச்சொல் ஒன்று

அ) வாழைமரம் ஆ) வாழைத்தோட்டம்

இ) வாழைப்பழம் ஈ) வாழை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

12. இருமுதுகுரவர் என்றால் யார்?

அ) ஆசிரியர் அதிபர் ஆ) தமையன் தமக்கை

இ) தாய் தந்தை ஈ) ஐயர் பூசாரியார்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

13. சிலப்பதிகாரம் எழக் கரணியமாய் அமைந்த பொருள்

அ) சிலம்பு ஆ) மதுரை இ) புகார் ஈ) பகை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

14. பண்டைநாள் தொட்டுத் தமிழர் போற்றும் கல்

அ) வைரக்கல் ஆ) கடவுட்கல்

இ) நடுகல் ஈ) மலைக்கல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

15. இக்காலக்கவிதை பாடத்தில் எதைக் கொண்டோடச் சொல்கிறார் கவிஞர்?

அ) கடவுச்சீட்டு ஆ) தாய்மொழி இ) நகைநட்டு ஈ) ஆவணங்கள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

16. ஈழத்தில் பல்லாண்டு காலமாய் ____________ அழும் ஓசையே கேட்டபடி இருக்கிறது. கீறிட்ட இடத்தில் வரவேண்டிய அடுக்குமொழி.

அ) கதறிக்கதறி ஆ) விட்டுவிட்டு இ) பாடிப்பாடி ஈ) கத்திக்குழறி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

17. அடுக்கிடுக்குத் தொடருக்கு எடுத்துக்காட்டு

அ) சிறுசிறு ஆ) சின்னஞ்சிறிய இ) சிறியசிறிய ஈ) சிறிதுசிறிதாய்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

18. மா பலா வாழைப் பழங்களை இவ்வாறு கூறுவர்

அ) முப்பழம் ஆ) நறுங்கனி இ) முக்கனி ஈ) முழுப்பழம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

19. உருவகவணிக்குச் சரியான எடுத்துக்காட்டு

அ) மதிமுகம் ஆ) முகமதி

இ) மலர்ந்தமுகம் ஈ) மலரும்முகம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

20. கண்ணகிக்கும் கோவலனுக்கும் அடைக்கலம் தந்த ஆயர்குலப் பெண்

அ) ஐயை ஆ) தேவந்தி இ) மாதவி ஈ) மாதுரி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

21. பெருங்கடல் வணிகனை இவ்வாறு அழைப்பர்

அ) மாநாய்கன் ஆ) மாசாத்துவன் இ) மாவணிகன் ஈ) மாபெரியோன்

அ) ☐ ആ) ☐ இ) ☐ ஈ) ☐

22. மலைத்தோள் என்பது

அ) உவமையணி ஆ) உருவகவணி

இ) தற்குறிப்பேற்றவணி ஈ) உயர்வுநவிற்சியணி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

23. சிலப்பதிகார வாழ்த்தில் இளங்கோவடிகள் வாழ்த்துவது

அ) இறைவனை ஆ) இயற்கையை இ) வேந்தரை ஈ) தமிழை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

24. பாய்கிற குதிரை என்ற தொகாநிலைத்தொடரை வினைத்தொகை ஆக்கினால்

அ) பாய்குதிரை ஆ) பாயும்குதிரை இ) பாயாக்குதிரை ஈ) பாய்ந்தகுதிரை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

25. ஆடலரங்கேறி மாதவி பெற்ற பட்டம்

அ) ஆடலரசி ஆ) நாட்டியப் பேரொளி

இ) தலைக்கோல் ஈ) கோல்தலை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

26. சோழநாட்டில் பிறந்து, பாண்டிநாட்டிலே விதவையாகி, சேரநாட்டிலே தன் கதையை முடித்துக்கெண்டவள்

அ) மாதவி ஆ) கண்ணகி இ) கவுந்தி ஈ) தேவந்தி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

27. சிங்கள அரசால் யாழ்நூலகம் எரிக்கப்பட்ட நாள்

அ) 31.05.1981 ஆ) 31.05.1983 இ) 31.05.1974 ஈ) 31.05 1977

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

28. யாழ்நூலக எரிப்புப் பற்றி எம்.ஏ.நுஃமான் பாடிய பாடலின் தலைப்பு

அ) நூல்களின் படுகொலை ஆ) நூலகப் படுகொலை

இ) சத்தியத்தின் படுகொலை ஈ) புத்தரின் படுகொலை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

29. இன்றும் கோவில்களில் வழங்கும் அபிசேகம் என்ற வடசொல்லின் நற்றமிழ்

அ) வழிபாடு ஆ) நீராட்டு இ) ஆராட்டு ஈ) பூசை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

30. பொற்றொடி வருகிறாள். இதில் பொற்றொடி என்பது

அ) வினைத்தொகை ஆ) பண்புத்தொகை

இ) அன்மொழித்தொகை ஈ) உம்மைத்தொகை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

(புள்ளிகள் 30)

*(விடைகளைப் பிறிதொரு தாளில் எழுதுக.)*

## 2) தரப்பட்டுள்ள இலக்கண / மொழியியல் வினாக்களுக்கு விடை தருக.

1. உவமையணிக்கும் உருவகவணிக்கும் உள்ள வேறுபாட்டை எடுத்துக்காட்டுடன் விளக்குக.
2. உயிர்முன் உயிர் புணர்தல் - எடுத்துக்காட்டும் விளக்கமும் தருக.
3. நகமும் சதையும் போல____________________ இந்த உவமைத்தொடரைக் கையாண்டு சொல்லியம் ஒன்று எழுதுக.
4. வழுவமைதி என்றால் என்ன? ஒரு வழுவமைதியை எடுத்துக் காட்டுத் தருக.
5. சொற்பொருள் தருக.

| | |
|---|---|
| 1. கற்பம்: | 4. பாங்கி: |
| 2. நற்றமிழ்: | 5. சீற்றம் |
| 3. கருணை: | 6. சமுத்திரம்: |

(புள்ளிகள் 15)

## 3) பாடநூல் வினா ஐந்திற்கும் முழுவிடை தருக.

1. பாண்டியன் முன் கண்ணகி போய் நின்ற கோலத்தை விளக்குக
2. கோவலனும் கண்ணகியும் புகாரை விட்டுப் புறப்பட்ட பொழுதை விளக்குக.
3. யாழ்நூலகத்தைச் சிங்களவர் எரித்தது ஏன்?
4. மதுரையை எரிக்கிறபோது யார்யாரை எரிக்கவேண்டாம் என்று தீக்கடவுளிடம் கண்ணகி கூறினாள்?
5. இக்காலக் கவிதைகளின் நோக்கம் என்ன?

(புள்ளிகள் 15)

4) கீழ்வரும் பாடலை வாசித்து, தரப்பட்டுள்ள வினாக்களுக்கு முழுவிடை தருக.

***இனிக்கும் எங்கள் தமிழீழம்***

*நடை தெரியாத இளமையிலே - நான்*
*தமிழ்மண் அளைந்து தவழ்ந்தெழுந்தேன்*
*நடக்க எழுந்த அகவைமுதல் - நான்*
*தமிழ்மண் நடையே நடக்கிறேன்*

*காணத் தெரிந்த காலம்முதல் - நான்*
*கவினார் தமிழீழம் காணுகிறேன்*
*பேணத் தெரிந்த நாள்முதலாய் - நான்*
*பேணுவது எல்லாம் பைந்தமிழே*

*நினைக்கத் தெரிந்த காலமுதல் - நான்*
*நிகரில் தமிழ்மண்ணே நினைக்கிறேன்*
*நினைத்து நினைத்து நெஞ்சத்தில் - நான்*
*தேனார் தமிழீழம் படைக்கிறேன்*

*பாடத் தெரிந்த நாள்முதலாய் - நான்*
*பாடிப் புகழ்ந்த தமிழ்மண்ணை*
*நாடிக் கிடக்கும் வாழ்வல்லால் - ஒரு*
*தனிவாழ்வு எனக்கென்று இருக்காது*

1. நடைதெரியாத இளமையில் இக்கவிஞர் செய்தது என்ன?
2. தமிழீழத்தை எப்போது காணுகிறார்?
3. நினைக்கத் தெரிந்ததிலிருந்து எதை நினைக்கிறார்?
4. கவிஞர் தமிழீழத்தை எங்கே படைத்துக் கொண்டிருக்கிறார்?
5. இப்பாடலிலிருந்து நீர் பெறும் உணர்வென்ன?

(புள்ளிகள் 10)

# தமிழர் மிடுக்கு

யாழ்குடா நாட்டின் பல பகுதிகள் நீர்வளமற்ற செம்மண் மேட்டு நிலங்களாகும். ஆனால், நல்ல வளமான மண். காய்ந்து வறண்டு புல்பூண்டும் முளையாது, நெருஞ்சி முள் வளரும் கலட்டி நிலம். அப்பகுதியில் வாழ்கின்ற மக்கள் வானத்தை நம்பியிராது ஆழக்கிணறு அகழ்ந்து நிலத்தடி நீரை இறைத்துப் பயிர் செய்வர். கார்காலத்திலும் சிலசமயம் மழை பெய்யாது விடின், மண் பாறை போன்று வலித்து இருக்கும். அந்த இறுகிய மண்ணைக் கலப்பையால் உழமுடியாமல் மண்வெட்டி கொண்டு கொத்திப் புரட்டி அடித்து நொருக்கிப் புழுதிபடச் செய்து, விதை விதைத்து, நீரிறைத்துப் பயிர் வளர்த்துப் பயன்பெறுவர். அப்பாறை போன்ற மண்ணைப் பதப்படுத்தி ஆழக்கிணறு தோண்டி நீர் பெறப் பெரும் பாடுபட்டு உடலை வருத்தி உழைப்பர். அவர்களது உழைப்பிற்குத் தகுந்த கூலி கொடுப்பதுபோல் பயிர்கள் தளதளவென வளர்ந்து கதிரீனும். கதிரீன்ற பயிர்களைக் கண்ணிமைபோல் அக்கறையுடன் காப்பர். கதிர் முற்றி விளைந்த பயிர்கள் பொன்போல் மின்னியபடி சலசலத்து, கதிர் கனத்தால் காற்றில் ஆடும். உழவர் அதைப்பார்த்து, ஒப்பனை செய்த குமரிப்பெண்கள் கும்மியடித்து ஆடுவது போல் கற்பனை செய்து மகிழ்வர். இனியென்ன ஆண்டுமுழுவதும் பட்டபாட்டிற்கு நல்ல விளைவு விளைந்திருக்கிறது என்ற விம்மிதத்தோடு அறுவடைக்கு ஒழுங்கு செய்வர். ஆனால், பருவகாலத்திலும் சரி, பயிர் வளரும் காலத்திலும் சரி பெய்யாத மழை அந்த அறுவடைக்கு உரிய நாளில் இரவோடிரவாக சூறாவளியாய் சோவெனக் கொட்டிப் பொழியும். வயல் வெள்ளத்தால் மூடப்பட்டு விளைந்திருந்த பயிர்கள் வெள்ளத்துள் மூழ்கிவிடும். வெள்ளம் வற்றுகிறபோது பயிர்கள் உக்கி அழிந்து நாசமாயப் போயிருக்கும். நிலமும் பழையபடி பாறையாய் இறுகிப்போகும். ஆனாலும், ஆண்டுமுழுவதும் அயராது பாடுபட்ட உழைப்பின் பயனை ஒரே இரவில் அழித்துவிட்டதே மழை என்று மனமுடைந்து போகாமல், மீண்டும் பழையபடி பாறையைப் பிளந்து பயன் விளைக்கும் முயற்சிக்கு மிடுக்கோடு மண்வெட்டியுடன் புறப்படுவர் நம் உழவர். அத்தகைய உயர்வுடைய உழவர் இன்று அந்த மண்ணையும் இழந்து ஏதிலிக் குடில்களில் கையறுநிலையில் உழல்கின்றனர்.

1. ஆண்டுமுழுதும் உழவர் பட்டபாட்டிற்குக் கிடைக்கும் பயன் என்ன?
2. உழவனின் உழைப்பிற்குக் கிடைக்கும் கூலி என்ன?
3. வயல் வாடிய போது பெய்யாத மழை பின் என்ன செய்தது?
4. யாழ்குடாநாட்டில் வாழ்கின்ற உழவர் எப்படிப் பயிர் செய்வர்?
5. மீண்டும் தொடங்கும் மிடுக்கோடு புறப்பட்ட உழவர் இன்று எப்படி வாழ்கின்றனர்?

(புள்ளிகள் 10

## 5) தரப்பட்டுள்ள பந்தியை உமது வாழிடமொழியில் மொழிமாற்றுச் செய்க.

இவ்வுலகில் பல்வேறு மக்களினங்கள் உள்ளன. எனினும், பிறரை மதித்தல், பிறருக்கு உதவுதல், அன்பு காட்டுதல், பிறர் துன்பம் கண்டு இரங்குதல் போன்ற பண்புகள் எல்லாவின மக்களுக்கும் பொதுவானதாகும். அதுபோல், பெற்றோர் மூத்தோர் போன்றவர்களின் வாழ்க்கை முறைகளைப் பிள்ளைகள் பின்பற்றுவர். நல்லொழுக்கமுள்ள குடும்பத்துப் பிள்ளைகள் நல்லவர்களாக வாழ்ந்து வாழ்வில் முன்னேறுவர். தீப்பண்புகள் கொண்ட குடும்பத்துப் பிள்ளைகள் குமூகக்கேடர்களாக உருவாகுகின்றனர். இதுவும் எல்லா மக்கட் கூட்டத்திற்கும் பொதுவானதாகும். நற்பண்புகளை வளர்த்து, நல்லவர்களாய் வாழுவோம்

(புள்ளிகள் 05)

## 8) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து, இருநூற்றைம்பது சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை வரைக.

1. யாழ்நூலகம்
2. இக்காலக் கவிதைகளின் சிறப்பு
3. ஈழத்தமிழர்களின் மீள்குடியேற்றம்.
4. புலம் பெயர்தமிழர்களும் தாய்மண்ணும்

(புள்ளிகள் 15)